அந்த கிணறுகளை தோண்டுவதற்கு அரசு கடன் உதவி செய்ய வேண்டும். அதேபோல, அப்போது பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கும் கரும்புத் தோட்டத்திற்கும் அரசு ஏதாவது உதவி செய்ய திட்டம் வகுத்துள்ளதா என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 நவம்பர் மாதம் நடைபெற்ற வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரம், விதை, பூச்சிமருந்துகள் ஆகியவை இலவசமாக அரசாங்கம் வழங்கியது. அப்படி வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலக்கட்டத்திலே விவசாயிகளினுடைய பயிரிடக்கூடிய விளைநிலங்கள் கற்களாலும் மணல்களாலும் மூடப்பட்டு மணல் மேடுகளாக காட்சி தருகின்ற காலத்திலே அவைகளை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு ஆணைகள் மூலமாக கடன் வழங்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதற்கு தேசிய உடமையாக்கப்பட்ட வங்கிகள் இருக்கின்றன கூட்டுறவு சேவை சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், அந்த விவசாயிகளுக்கு அந்த மணல் மேடுகளை அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய பணிகளுக்கு ஆகிற செலவிலே அரசு ஒரு சில தொகையை மானியமாக வழங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேராவூணித் தொகுதியில் ஆதி திராவிடர்களின் ஜீவன்தாரா திட்ட கிணறுகளுக்கு மூன்று ஆண்டுகளாக மோட்டார் வாங்க மானியம் வழங்காதது குறித்து.

மாபுண்மிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

1992 ஏப்ரல் 23]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணித் தொகுதியில் ஆதிதிராவிடர்களின் ஜீவன்தாரா திட்ட கிணறுகளுக்கு மூன்றாண்டுகளாக மோட்டார் வாங்க மானியம் வழங்காதது குறித்து" மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

பேராவூரணித் தொகுதியில் கடந்த மூன்றாண்டுகளில் வெட்டப்பட்ட ஜீவன்தாரா கிணறுகள் மற்றும் இது சம்பந்தப்பட்ட ஏனைய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

விவரங்கள்.		எண்ணிக்கை.
1. 1988-89, 1989-90 1990-91 ஆகிய மூன்றாண்டுகளில் அனுமதிக்கப்பட்ட ஜீவன்தாரா கிணறுகளின் எண்ணிக்கை.		284
2. முடிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை ..		265
3. பயனடைந்தவர்களின் எண்ணிக்கை ..		466
4. மோட்டார் பம்ப்செட் வாங்க நிதி உதவி கோரி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை :—		
(அ) ஆயில் மோட்டார்	87	
(ஆ) மின்சார மோட்டார்	109	196

இந்த 196 இனங்களில் ஆயில் என்ஜின், மின்சார மோட்டார் வாங்க வங்கிகள் கடன் வழங்க முன்வராத காரணத்தால் 80 இனங்கள் நிராகரிக்கப்பட்டன. 102 இனங்கள் வங்கிகளின் பரிசிலனையில் உள்ளன. மீதம் 14 இனங்கள் மட்டுமே "தாட்கோ"-வில், மானியம் பெறுவதற்கு நிலுவையில் உள்ளன.

2. ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின்சார மோட்டார் வாங்குவதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாகவும், கடன் வழங்கும்

சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலமாகவும் மானியம் கேட்டுத் தேவையான விவரங்களுடன் விண்ணப்பங்கள் முழுமையான அளவில் வந்ததும் '' தாட்கோ '' மானியம் வழங்குகிறது. '' தாட்கோ '' மானியம் வழங்குவதற்கு மனுதாரர்கள் தங்களுடைய விண்ணப்பத்துடன் சான்றுகள், ஆவண நகல்கள் தரவேண்டும். (1) சாதிச்சான்று, (2) வருமானச் சான்று, (3) உணவுப் பங்கீட்டு அட்டையின் நகல், (4) மின்வாரியத்திடமிருந்து பெறப்பட்ட சாத்தியக் கூறுச் சான்று மற்றும் (5) சிட்டா அடங்கலின் உரிய பகுதிகளின் நகல்கள். 1991-92-ஆம் ஆண்டில் வட்டார வளர்ச்சி அலுவலர், பேராவூரணி, மூலமாக தாட்கோவிற்கு 14 விண்ணப்பங்கள் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டன.

மற்ற கோரிக்கைகள் ஏதும் கடந்த மூன்றாண்டுகளாக வரவில்லை. கோரிக்கை வந்துள்ள 14 இனங்களில் கீழ்க் கண்ட 4 நபர்களின் விண்ணப்பங்கள் மீது மானியம் தயார் நிலையில் உள்ளது :—

(1) திரு. பாலன், தகப்பன் பெயர்— நாச்சியப்பன்.
(2) திரு. ஆறுமுகம், தகப்பன் பெயர்—சந்தானம்.
(3) திரு. கருப்பையா, தகப்பன் பெயர்— அரங்கன்.
(4) திரு. உதயன், தகப்பன் பெயர்—முத்தன்.

3. தேவையான விவரங்கள் கொடுப்பதற்கு விண்ணப்பதாரர்கள் அதிகக் காலம் எடுத்துக் கொண்டார்கள். மேலும், இனம் (4)-ல் குறிப்பிடப்பட்டுள்ள திரு. உதயன் இறந்துவிட்ட காரணத்தால் அவர் வாரிசுதாரருக்கு மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற 10 இனங்களிலும் விண்ணப்பதாரர்கள் தேவைப்படுகின்ற விவரங்கள் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இது குறித்து விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களுக்கு பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டுள்ளது. மேலும்வட்டார வளர்ச்சி அலுவலர் இது குறித்து நினைவூட்டப்பட்டுள்ளார்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையை நான் பார்த்தேன். அந்த அறிக்கையில் பேராவூரணி தொகுதியில் மொத்தம்—சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பேராவூரணி ஒன்றியம் ஆகிய இரண்டு ஒன்றியங்களில் 166, 99 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப்பட்டு, அது கட்டப்பட்டு, அதற்கு மோட்டார் இணைக்காமல், சுமார் 1989, 1990, 1991 ஆகிய மூன்று ஆண்டுகளில் அந்த கிணறுகளுக்கு மோட்டார் வழங்கப்படவில்லை. இங்கே விவர அறிக்கையில் அதற்கான மனுக்கள் உரிய முறையில் கொடுக்கப்படவில்லை

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த 265 நபர்களுக்கும் முறையாக மனுக்கள் அனுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில நான் பலமுறை கேட்கிறபோது, எங்களுக்கு மேலேயிருந்து மானியம் வரவில்லை என்ற தகவலைச் சொன்னார்கள். இதைக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் நேரிலே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம், கேள்வியாகக் கேட்க வேண்டும்,

திரு. ஆர். சிங்காரம் : அந்த சப்ஜெக்டில் தான் பேசுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த சப்ஜெக்டில் உங்களுடைய கேள்வி.

திரு. ஆர். சிங்காரம் : தொகுத்து கேட்க வேண்டும். மாணபுமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் சொனன போது அவர்களும் அதற்காக முயற்சி எடுத்ததாக நான் கேள்விப்பட்டேன. தி.மு.க. ஆட்சியில் 1989, 1990 மற்றும் 1991 ஆரம்பத்தில் இந்தத் திட்டத்திற்கு வந்த மானியத்தை பல இலட்சக்கணக்கான ரூபாயை வேறு எங்கேயோ கொண்டு போய் சேர்த்துவிட்டதாக அறிந்தேன். அதன் காரணமாகத்தான் இந்த மூன்றாண்டுக் காலம்—பேராவூரணி தொகுதி மட்டுமல்ல, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இந்த மானியம் வழங்கப்படாமல் இருக்கிறது என்று அறிந்தேன். அமைதய அமைச்சர் அவர்கள நன்கு கவனித்து 265 ஜீவன்தாரா கிணறுகளுக்கும் உடனடியாக மானியம் வழங்கி, மோட்டார் வாங்க வங்கிகளுக்கு அறிவுரை வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988-89, 1989-90, 1990-91 இந்த மூன்றாண்டுகளில் 265 மானிய கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்த கிணறுகளுக்கு உரிய தொகை அந்த ஆண்டே செலவு செய்திருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அதற்குரிய நடவடிக்கையெடுப்பதற்கு, அதற்குரிய மானியம் சாங்ஷன் செய்வதற்கு, இந்த அரசுக்கு உரிமை உண்டு. ஆனால் வங்கியிலே நிலுவையில் இருக்கிற கடன்களைத் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற மத்திய அரசுதான் அதற்கு பொறுப்

பெற்றுக் கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் மானியத்தை மிக விரைவில் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்தை வழங்குவது தமிழக அரசு என்றாலும், வங்கியிலே கடன் கொடுப்பது மத்திய அரசு ஆளுகையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்தியிலே வழங்கப்படுகிற இதே ஜீவன் தாரா திட்டத்திற்கு மானியம் வழங்குவதும் மத்திய சர்க்கார் தான். '' எக்சிகியூஷன் ஆப் ஒர்க் '' என்பது தமிழ்நாடு சர்க்கார் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன். அதேபோல மின்சாரம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் இதற்கு முன்னால் சொன்னபோது உடனடியாக மின்சார இணைப்பு கொடுத்து, அந்த மோட்டார் வழங்குகிற வரையிலும், அந்த மின்சாரத்துக்கு டைம் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்ட காரணத்தால், அவர்களுக்கு எந்த நேரமும் மின்சாரம் கொடுப்பதற்கான ஆயத்தப் பணியை மின்சாரத் துறை சொல்லியிருக்கிறது. ஆனால் மூன்றாண்டு காலமாக கிணறு வெட்டப்பட்டு, அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல், இந்த கடுமையான வறட்சி நேரத்தில், அந்த விவசாயிகள், ஆதிதிராவிட மக்கள் கடுமையான கஷ்டத்திற் குள்ளாகி இருக்கிறார்கள். தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் இதோடு முடித்துக் கொள்ளலாம். கேள்வி கேட்கச் சொன்னால் நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம் ? (குறுக்கீடு) விளக்கம் வேண்டுமென்றால் அவரிடம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

முற்பகல் 11-15

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முழு விவரத்தை நான் பட்டியலாக வைத்து இருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, அந்த ஆதிதிராவிட மக்கள் பலன் பெறுகிற வகையில், கிணறு களுக்கு மோட்டார் வழங்குவதற்கும், அந்த வங்கிகளுக்கு, பேங்குகளுக்கு உத்தரவிடுவதற்கும் நீங்கள் ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, ஆதிதிராவிட நலத்

துறையைப் பொறுத்தவரையில் மானியம் சேங்ஷன் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மானியம் சாங்ஷன் செய்த பிறகு, கடன் கொடுக்கப்பட்டால் மின்சாரம் வழங்குவதற்கு, முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. வ. சத்தியமூர்த்தி, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பாசனத்துறை குறித்து 1985-86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழு அளித்த முதலாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் இரண்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன். அளிக்கப்பட்ட அறிக்கையில், பக்கம் 12, வரிசை எண். 9, பரிந்துரை எண் 9, பத்தி 24 நீக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்து அமைகிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த எட்டாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தேழாவது அறிக்கையை அளிக்கிறேன்.